446

EVERY BOY'S LIBRARY SERIES.

No. 1.

ALADDIN

OR

THE WONDERFUL LAMP.

BY

C. R. SRINIVASA IYENGAR.

Author of Jeevabhupathi or Tamil Talisman, Merchant of Venice, and Ali-Baba and The Forty Thieves.

...PH, S. J., Superintendent, St. Joseph's Industrial School Press, TRICHINOPOLY.

1912. [POSTAGE EXTRA.

Copyright.

CH
031, 3
N12
120425

தமிழ் கற்கும் சிறுவர்க்கான புத்தகத்தோடர்.

நம்பர் 1.

அலடின்

அல்லது

விசித்ர விளக்கு.

இஃது

ஸ்ரீரங்கம், ஹைஸ்கூல் உதவி உபாத்தியாயரும்,
ஜீவபூபதி அல்லது தமிழ் டாலிஸ்மன்,
வெனிஸ் வர்த்தகன், அலிபாபாவும்
நாற்பது திருடர்களும்
முதலிய நூல்களுக்கு ஆசிரியருமான
வி. ஆர். ஸ்ரீநிவாஸ ஐயங்காரால்
இயற்றி வெளியிடப்பெற்றது.

திருச்சினாப்பள்ளி கவர்ன்மெண்டு
அர்ச். சூசையப்பர் தொழிற்சாலை அச்சாபீசில்
பதிப்பிக்கப்பட்டது.

1912

விலை. அணா 3.] [தபால்சார்ஜ் வேறு.

காபிரைட் ரெஜிஸ்டேர்டு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
5 AUG 1912
MADRAS.

FOREWORD.

The story of Aladdin or the Wonderful Lamp is too well-known to the public to need any long introduction. Though so well-known, yet, it has such an abiding interest to children of schoolgoing age, that any amount of repetition will not become unnecessary or wearisome.

The object of the writer in the publication of this and similar works is twofold—(1) to bridge the gulf that exists between the spoken language and the written one and (2) to enable the students to have a good command of easy, colloquial, idiomatic Tamil, without the necessity of going in for a laboured, pedantic style of the Sangam age or of poetical literature, quite unsuited to their tender age. Some use has also been made of Sanskrit words, and they are spelt, not according to the strict rules of Tamil Grammar, but phonetically, as is the tendency of modern writers.

The work has grown in size and therefore its price has also been increased.

The appendix contains a list of idiomatic phrases &c., which the students will do well to master. The list contains not only those that are directly used in the work, but also those, which, the teacher, may, in his discretion, draw the attention of the students to, either in a casual way, or as a necessary association of idea, by way of opposites or by a distinction in gender or sex. Such

derivables are denoted by the sign cross †; and common sayings are shown by a starmark.*

The author hereby tenders his warmest thanks to those who induced him to take up such a work, to those who helped him with valuable suggestions, to those who went through the manuscripts, and to those who went through the proofs.

The writer's special thanks are due to those friends of Literature who have come forward to bless the works with their kind patronage.

The authorities of the St. Joseph's Industrial School Press are especially to be congratulated upon and my sincere thanks are due to them, for the promptness and neatness of execution.

Srirangam,
10th June 1912.

C. R. S.

அல்டின்

அல்லது

விசித்திர விளக்கு.

பரிச்சேதம் 1.

அலடினைக் கவர்ந்த படலம்.

[சீனா—தையற்காரன் மகன்—அலடின்—ஏழைக்குடும்பம்—பிதா மரணம்—விளையாட்டு;—மந்திரவாதி தோன்றுதல்—குடும்ப வார்த்தை பேசி மர்மம் அறிதல்—வெகுமதி கொடுத்தனுப்புதல்;—அலடின் தன் இல்லம் புகுந்து அன்னைக்கு அறிவித்தல்;—பையன் சொன்ன வரலாற்றின் உண்மையைச் சந்தேகித்தல்—பிறகு வெகுமதி கண்டு களித்தல்;—மறுநாள் மந்திரவாதி இல்லத்திற்கு வருதல்—மதனியைக் கண்டு உபசாரம் விசாரித்தல்—அலடின் ப்ரஸ்தாபம்—அவனது விளையாட்டு புத்தி தெரிந்து கொளல்—மேலே பிழைக்கும வழி சொல்லுதல்—கடைக்கு இட்டு வந்து வஸ்திரம் அளித்தல்—மறுநாள் ஊர் நோக்கம் காட்டுதல்—ஊருக்கு வெளிப்புறம் எகுதல்—கருதிய இடம் வந்து சேருதல்—நடை முடிவு.]

முன்னொரு காலத்தில், சீனா தேசத்தில், பீகின் என்ற தலை நகரில், தையற்காரன் ஒருவன் வஸித்துவந்தான். அவனுக்கு அலடின் என்ற மகன் ஒருவன் இருந்தான். இவ்அலடினுக்கு பன்னிரு பிராயத்திலேயே, பிதாவை இழக்கும்படியான துர்ப்பாக்கியம் நேர்ந்தது. இவன் அன்னைக்கு இவனிடம், தகப்பனில்லாப் பிள்ளையென்று, விச்வாஸம் மேலிட்டது. ஸம்பாதித்துப் போடுகிற புருஷன் போகவே, தன் குடும்பக் காலக்ஷேபம் நடக்கவேண்டிய நிமித்தம், வெகு பாடுபட்டு வந்தாள். மகாப் பிரயாஸைக்காரி. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அன்றோ?

ஏழையானால் பிள்ளையிடம் அன்புகுன்றுமோ? கூலிவேலைசெய்து, அன்றுடும்கிடைத்ததைக்கொண்டு, குழந்தையை நாள் ஒருமேனி யும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர்த்துவந்தாள். ஆனால், பையன் நல்லவன் அல்லன். ப்ரயாஸை என்பது சிறிதும் இல் லாதவன், மகா சோம்பேறி, ஸதா விளையாட்டில் த்ருஷ்டியுள்ள வன். ஆகவே, தலைக்கு ஒத்த பிள்ளையிருந்தும், இவர்கள் கால க்ஷேபத்திற்கு இவனால் அதிகவுதவியில்லை.

ஒருநாள்,வீதியில், இவன் விளையாடிக்கொண்டிருக்கையில், வேற்றுமுகக் கிழவன் ஒருவன் அங்கு வந்து தோன்றி, இவனை உற்றுப் பார்த்தான். வந்தவனே நமது நாட்டு மந்திரவாதி, சுக் குப்பொடிக்காரன். தன் மாந்திரீகம் பலிப்பதற்கு இவ் அலடி னுடைய உதவி பெறலாம் என்று வந்தவன் இவன். ஆகையால், 'அப்பா, மகனே, நான் உன் சிற்றப்பன், உன் தகப்பன் எனக்கு அண்ணன் ஆகவேண்டும்,' என்று மந்திரவாதி அலடினை நோக்கிச் சொன்னான். அதற்கு, அவன், 'என் அப்பன் இறந்து வெகு நாளாயிற்றே, நான் என் தாயிடம் தானே வஸித்து வருகிறேன், எங்கள் வீட்டில் எங்களைத்தவிர வேறு யாரும் மனுஷ்யாளில் லையே' என்றான். அதற்கு அவன், 'அப்பா, நீ சிறு பிள்ளை, உன க்கு இந்த உறவு தெரியாது; நீ இளம்பிள்ளை, இது வெகுகாலத் திற்கு முன் நடந்த ஸங்கதி. நான் தேசாந்தரம் போயே நாற் பது வருஷமாகிறது, இதெல்லாம் நீ எங்கே கண்டாய்?' என்று சொல்லிக் கட்டி முத்தமிட்டு, கை நிறையப் பணம் தந்து, தாயி டம் கொண்டுபோய்க் கொடுக்கச் சொல்லி, அவளை ஆயிரம்தரம் விசாரித்ததாகச் சொல்லித் தானும் மறுநாள் வருவதாகத் தெரி யப்படுத்தி, தனக்குச் சமையலும் செய்து வைக்கச் சொன்னான்.

பணம் என்றால் பிணமும் வாய் திறக்குமன்றோ! எடுத்தான் ஓட்டம், பணத்தை அன்னையிடம் கொடுத்து, செய்தியையும் சொன்னான்.

இதைக் கேட்ட தாய்க்குத் தூக்கி வாரிப்போட்டது. 'என் னடா, என் புருஷனுடன் வெகுகாலம் வாழ்ந்தேனே, தனக்குச் சகோதரன் உண்டென்று ஒருநாளும் அவர் சொன்னதில்லையே, இதென்ன, அபூத கல்பனையாக இருக்கிறது,' என்று சங்கித்தாள்.

மறுநாள், சொன்னபடி, மாந்திரீகன் இவள் வீடு தேடிவந்து, இவளை உபசாரம் விசாரித்துவிட்டு, 'ஐயோ, அண்ணன் இருக்கும்போதே அவரை வந்து பார்க்கும்படியான பாக்கியம் எனக்கு இல்லாமற் போயிற்றே, தேசாந்தர மன்றோ போயிருந்தேன், இப்போது இறந்த செய்தி கேட்டன்றோ, இங்கே வர நேரிட்டது,' என்று கதறிக் குழந்தையைக் கட்டிக்கொண்டு அலறி, யோகக்ஷேமத்தை விசாரித்து, இல்லாக்குடியென்று அனுதாபப் பட்டுத் திரும்பவும் கைகொண்ட பணம் தந்துதவினான்.

இவள் ஸந்தேகம் முற்றிலும் மாறிற்று. மாந்திரீகன் இவள் மனத்தை அடியோடு கவர்ந்துவிட்டான்.

பின்பு, 'பையன் என்ன செய்கிறான்,' என்று கேட்க, 'விளையாட்டுப் புத்தி இருக்கிறதே ஒழியக் குடித்தனத்தைக் கவனிக்கிறானில்லையே' என்று சொல்லக்கேட்டு, பையனை நோக்கி, 'அப்பா, உனக்கு கைத்தொழில் செய்து பிழைப்பது ச்ரமமாக இருந்தால், உனக்கு ஒரு ஜவுளிக் கடை வைத்துத் தருகிறேன், அதைக் கொண்டு பிழை' என்று தைர்யம் சொல்லிப் பிறகு, 'இரக்கப் போனாலும் சிறக்கப் போகவேண்டும், இந்தக் கந்தைத் துணியை அவிழ்த்துப்போடு, நல்ல துணி வாங்கித்தருகிறேன், உடுத்திக் கொள்' என்று கடைக்கு இட்டுப்போய் புதிது வாங்கித் தந்து வீட்டிற்கு கொண்டுவந்துவிட்டான்.

மறுநாள், பின்னும் வந்து 'வ்யாபாரம் என்பது இலேசான கார்யமன்று, பல கடைகளுக்கும் போய், நோட்டம் பார்ப்போம் வா, என்று அழைத்துச் சென்றான். தாயும், 'ஸரி,' என்று கூட அனுப்பிவிட்டாள். ஊரெல்லாம் கடந்து செல்லவே, பையன், 'எங்கு அழைத்துப் போகிறீர், சிற்றப்பா,' என்றான். 'இனி நடக்க என்னால் இயலாது, கால் நோகின்றது,' என்று சொல்ல, 'அப்பா, சற்றுப் பொறு, கிட்டத்தில் இருக்கிறது கருதிய இடம், பயப்படாதே, உன் ப்ரயாஸைக்குத் தக்க வெகுமதி கிடைக்கும், இவ்வுலகத்தில் இதுவரை நீ பார்த்திராத அவ்வளவு நேர்த்தியான உத்தியான வனம் காணப்போகிறாய்,' என்று ஆசை வார்த்தை சொல்லி, அழுத பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டுவது போல், பொன் நாணயம் ஒன்று தந்து, குளிர்ந்த பேச்சுப் பேசித்

தேற்றினன். வெகு தூரம் போயும் தோட்டம் கண்ணுக்குத் தென்படவேயில்லை.

பரிச்சேதம் 2.

பிலம் நீங்கு படலம்.

[நெருப்பு மூட்டல்—தூபம் போடுதல்—மந்தரம் ஜபித்தல்—பூமி பிளத்தல்—குகை காணல்—அலடின் மோதிரம் பெறுதல்—செய்முறை போதனை—உட்செல்லுகை—விளக்குக்கொணர்தல்—மாந்திரீகன் விளக்கைத் தாவென்று கேட்டல்—அலடின் தன்னை முதலில் வெளியேற்ற வேண்டல்—இணங்காமை—கோபம்—மந்தரம்—பூமி மூடுதல்—அலடின் அடைபடுதல்—பசி—ஏக்கம்—கை பிசைதல்—மோதிரத்தினின்று பூதம் கிளம்புதல்—வீடு கொண்டுபோய்ச் சேர்க்க பூதத்தை வேண்டல்—இல்லம் அடைதல்.]

கடைசியாக ஓர் இடம் வந்து நின்றுகொண்டு, 'அப்பா, நமது நடை முடிந்தது, இனி நீ நடந்து ச்ரமப்படவேண்டாம்; சுள்ளி கொஞ்சம் பொறுக்கி வா, மகனே,' என்று சொல்லி, அக்காலத்து வழக்கப்படி, சிகிமுகிக்கல் தட்டி, பஞ்சை நடுவில் காட்டி, பற்றவைத்து, அலடின் கொணர்ந்து தந்த சுள்ளி கொண்டு பெருந் தீ வளர்த்து, அதில் ஏதோ தூபம் கமழும்படி போட்டு, மந்தரம் ஜபித்தான்.

உடனே, பூமி 'படார்' என்று வெடித்தது. பித்தளை வளையம் போட்ட பெரும் பாராங்கல் ஒன்று தோன்றிற்று.

அலடின் திகிலடைந்து ஓடத் தலைப்பட, அவனைச் சுக்குப் பொடிக்காரன் கையைப் பிடித்திழுத்து, 'அப்பா, நான் சொல்வதைக் கேள், கூடிய சீக்கிரத்தில் நாம் தனவந்தர்களாக ஆகிவிடப்போகிறோம், இக்கல்லின் கீழ் விசேஷ த்ரவ்யம் இருக்கிறது. அதை நீதான் தொட்டு எடுக்கலாம், ஆகையால் இவ்வளையத்தைப் பிடித்து இக்கல்லைத் தூக்கி எடு' என்றான்.

அலடின் அவன் சொன்னபடி கேட்டு நடந்தான். கல்லைத் தூக்கவே, பூமிக்குள்ளே, பெரிய பள்ளமும் படிக்கட்டுகளும் தோன்றின.

மந்தரவாதி, 'மகனே, படிக்கட்டின் வழியாக இறங்கிப் போ, அப்பால் துருப்பிடித்த இரும்புக் கதவு ஒன்று தெரியும், அதைத் திறந்துகொண்டு போனால், மூன்று லோகோத்தரமான கூடங்கள் தோன்றும், அவைகளையும் தாண்டிப்போனால் வெகு நேர்த்தியாயும் கண்ணுக்கு ரமணீயமாயும் உள்ள உத்தியான வனம் ஒன்று தென்படும். அத்தோட்டத்தின் கோடி எல்லைச் சுவரில் பிறை ஒன்றில் பித்தளை விளக்கு ஒன்று தூண்டா விளக்குபோல், ஸதா எரிந்துகொண்டிருக்கும்; அதைக் கண்டவுடனே விளக்கை அவித்துவிடு, எண்ணெயையெல்லாம் அப்புறம் கொட்டிவிடு, விளக்கை உள் சட்டையின்கீழ் மறைத்துக் கொள்ளு, உடனே புறப்பட்டு என்னிடம் வந்துசேரு' என்று சொல்லி, மாந்திரீகன் தன் கையில் அணிந்திருந்த மோதிரம் ஒன்றை எடுத்து அலடின் விரலில் போட்டு, 'அப்பா, இது உள்ளவரையில் உனக்கு ஒரு குறைவும் வராது, உபத்ரவம் ஒன்றும் அணுகாது, பத்ரமாகப்போய் வா,' என்றான்.

அலடின் பள்ளத்தில் இறங்கினான். படிக்கட்டுகளைத் தாண்டினான். கூடங்களைக் கடந்துசென்றான். ப்ரஸ்தாபித்திருந்த உத்யானவனம் தோன்றிற்று. அங்குள்ள மரங்களிலும் செடிகளிலும் பூத்துக் காய்த்திருந்தவை இவன் கண்ணைக் கவர்ந்தன. எங்கும் வ்ருக்ஷங்களில் காண்பதுபோன்ற கனிவர்க்கமாயிராது திவ்ய தேஜோமயமான நவரத்ன கஜிதமான கனி வர்க்கங்கள் இருக்கக்கண்டு, மகிழ்ச்சியால் உள்ளம் பூரித்தான். கனிகளைப் பறித்து பைகளை நிரப்பிக்கொண்டான். அப்பால் மாடத்தை நோக்கிச் சென்று, விளக்கைக் கண்டு, அதனைக் கைப்பற்றி, சடிதியில் போன வழியே திரும்பிவந்து, படிக்கட்டும் ஏறி, மாந்திரீகனையும் கண்டான். காணவே, 'அப்பா, மகனே, அவ்விளக்கை இங்கு தா' என்றான் மாந்திரீகன்.

அலடின், 'ஐயா, முதலில் உமது கையைக் கொடுத்து என்னை மேலே தூக்கிவிடும்' என்றான்.

அதற்குச் சுக்குப்பொடிக்காரன், 'முதலில் விளக்கைக் கொடு, பிறகு தூக்கிவிடுகிறேன்' என்றான்.

பையனும் தன்னைத்தான் முதலில் தூக்கி விடவேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான்.

இவ்வாறு இருவரும் பிடிவாதம் பிடிக்கவே, கிழவனுக்கு வந்துவிட்டது கோபம். வளர்த்து வைத்திருந்த தீயில் இன்னும் சிறிது தூபப்பொடி தூவினன், மந்திரத்தை ஜபித்தான். தூக்கி அப்பால் வைத்திருந்த பாருங்கல்லும் தானகவே சடிதியில் யதாஸ்தானம் வந்து உட்கார்ந்தது, பள்ளத்தை மூடிவிட்டது. அந்தகார இருளில் தனிமையாக நமது அலடின் அடைபட்டுவிட்டான். அடைபடவே, கதறினன், அலறினன், புலம்பினன், 'ஐயா, அப்பா, என்னை எப்படியாவது உயரத் தூக்கிவிடு' என்று ஓலமிட்டழுதான். கிணற்றிலிருந்து பேசுபவனது குரல்போல் இவன் பேசினது மந்திரவாதி காதில் விழவில்லை. பழையபடி படிக்கட்டிறங்கினன், ஏறினன், திரும்பவும் இறங்கினன், திக்குத் திசை ஒன்றும் தெரியவில்லை. ஆபத்துவந்தால்தானே ஈச்வரத்யானம் வருவது உலக இயல்பு. கடைசியாக ஈச்வரனை நினைந்து உருகித் தொழத்தொடங்கினன். ஸங்கடம் மிகுந்தகாலத்தில் கையைப் பிசைவதைப் பார்த்திருப்பீர்களே, அவ்வாறே கையைப் பிசைந்தான். கையில் மாந்திரீகன் போடுவித்திருந்த மோதிரம் உறையவே, திடீரென்று அதில் நின்றும் புறப்பட்டது, ஐயா, ஒரு பூதம்.

'உனக்கு என்ன வேண்டும், என்னை எதற்காக வரவழைத்தாய், சொல்லு; நீ ஏவினதைச் செய்ய நானும், இன்னும் இந்த மோதிரத்தைக் காத்திருக்கிற இதர பூதங்களும் ஸித்தமாகக் காத்திருக்கிறோம்' என்றது அப்பூதம்.

வேறு வேறு இடங்களில் ஒருவனை அடியோடு கீழே தள்ளிவிட இந்த ரூபமும் இந்தக் குரலுமே போதும். கடைசி ஸமயத்தில் அதைர்யத்தினின்றுமே தைரியம் பிறக்கும் என்று கேட்டதில்லையா? அதேப்ரகாரம் விசேஷ தைர்யம் பிறந்தது.

'நீ யாராயிருப்பினும், இப்பயங்கரமான அந்தகாரத்தினின்றும் என்னை முதலில் வெளியேற்றிவிடு, வீடு கொண்டுபோய்ச் சேரு,' என, உடனே 'படீர்' என்று பூமி பிளந்தது; பார்த்தான், பாருங்கல்லுமில்லை, மந்திரவாதியுமில்லை; க்ஷணிக நேரத்தில் தன் அருமைத்தாயினிடம் நிற்கக்கண்டான்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 1912 MADRAS

பரிச்சேதம் 3.

விளக்குப் பூதம் காண்படலம்.

[கூஷாத்பாதை—அன்னையை அன்னம் கேட்டல்—பிரிந்த காலமாக அன்னை தன் நிலைமையைத் தெரிவித்தல்—குகைக்கனியை விற்று ஜீவித்தல்—பிறகு விளக்கு விற்க யோசித்தல்—அன்னை விளக்குத் துடைத்தல்—பூதங்கண்டு மூர்ச்சித்தல்—பூதத்தை மகன் அன்னம் கொண்டுவரக் கட்டளையிடல்—பசி தீர்த்தல்—உருசி கண்ட பூனை உரியைத் தாவுவதுபோல் அடிக்கடி ஏவல் கொளல்.]

இப்பூதம் தோன்றிய நியாயம் அலடினுக்காவது அவன் அன்னைக்காவது இன்னும் தெரியாது. ஆதலால் இம்மோதிரத்தை இன்னொருதரம் தேய்க்கக் காரணமில்லை.

பிள்ளையை மனப்பூர்வமாக மைத்துனன் கையில் ஒப்புவித்தாளானாலும், பிள்ளை இரண்டொரு நாள் வராதது கண்டு, பிள்ளையைப் பறிகொடுத்தவள்போல் தவித்து, தனித்து உழைத்துப் பாடுபடுவதையும் நிறுத்தி, கையில் ஒரு காசுமில்லாதவளாகி, பரிதபித்து நின்றாள். இவனைவிட்டுப் பிரிந்து இரண்டொரு நாளாயிற்று.

பிள்ளையும் அந்தகாரத்தில் அடைபட்டு பட்டினி பசியால் வருந்தியவனானதால், 'அம்மா, பசியாக இருக்கிறது, ஏதாவது உண்ணத் தா' என்று கேட்க, அவள் 'அப்பா, மகனே, நான் உண்டு மூன்று நாளாகிறது, வேலையும் செய்யவில்லை, கையில் ஒரு துட்டுமில்லை, உன்னைக்காணாது, மழைமுகம் காணாத பயிர் போல் வாடினேன். இப்போதுதான் உன் முகத்தைக்கண்டு என் உயிர் எனக்கு வந்தது, நான் என்ன செய்வேன்' என்றாள்.

இதைக் கேட்ட அலடின் தோட்டத்தில் பறித்து வைத்திருந்த கனிகளில் சிலவற்றை எடுத்து அருகிலிருந்த தட்டானிடம் காட்டினான். இவை உண்மையிலேயே நவரத்தினக் கற்கள், விலையுயர்ந்தவை. ஆனால், அலடின் முட்டாள் என்று கண்டு கொண்ட தட்டான், 'அப்பா, இவையெல்லாம் கண்ணாடி ஓடு

கள், ஆயினும் இவற்றின் வர்ணங்களைக்கண்டு மெச்சி, கல் ஒன்றுக்கு அணு நான்கு வீதம் தருகிறேன்' என்ருன்.

பாடுபட்டுத் தேடாது அனுயாஸமாக கண்டெடுத்த பொருளுக்கு மாற்று ஏது உறை ஏது? 'திருட்டுச்சொத்துக்கு தொப்பை மரக்கால்' என்று கேட்டதில்லையா, இதேப்ரகாரம் பஞ்சத்திற்குப் பிள்ளைவிற்பார்போல், அகப்பட்டதைக்கொண்டு ஸந்தோஷமாகவே, அலடின் வீடுபோய்ச் சேர்ந்தான்.

கட்டிக்கொடுத்த சோறும், சொல்லிக்கொடுத்த புத்தியும் எத்துணை நாளைக்கு நிற்கும் என்பார்களே, அதுபோல் ஸொத்தை விற்று அழித்துத் தின்கிறதென்ருல் எத்தனை நாளைக்கு நிற்கும், நீங்களே யோசித்துப்பாருங்கள்.

கற்கள் விற்றதைக்கொண்டு, ஒரு மாதம்போது ஸுகமாகக் கழித்தார்கள். பின்னும், ஆகாரம் குறைவுபடவே, இன்னும் விற்றுத்தின்பதற்கு கற்கள் இல்லாமைபற்றி, 'அம்மா, நான் கொண்டுவந்த விளக்கை விற்று வருகிறேன், எடுத்துவா, அம்மா,' என்ருன்.

இவ்விளக்கின் அருமை பெருமையை இவனுக்கு மந்திரவாதி சொல்லாததினுல், அதன் மஹிமை இவனுக்குத் தெரியவில்லை.

மகன் சொல்லைக் கேட்ட தாய், 'விளக்கு அழுக்கு அடைந்திருக்கிறது, ஆகவே, புளி, செங்கற்பொடி முதலியவற்றைக் கொண்டு விளக்கித் தருகிறேன், அப்போதுதான் வாங்குவோர் ப்ரியப்படுவார்கள்.' என்று சொல்லி விளக்கைத் துடைக்கவே, பூதம் ஒன்று அதினின்றும் புறப்பட்டது. ஐயா, இது முன் குகையில் அலடின் கண்ட பூதத்தினும் அதிகப் பெரிது, அதிக விகாரமுள்ளது, பயங்கரமானது. தோன்றவே, கிழவி நடுநடுங்கிக் கீழே விழுந்து மூர்ச்சித்தாள். ஆகையால் அவளுக்குப் பூதம் வசமாகவில்லை. அதிர்ந்து அடித்தாருக்கு ஐயனுருமில்லை. பிடாரியுமில்லை, என்று கேட்டதில்லையா? அதுபோல், நடுங்காமல், அதட்டி அடித்து, ஏவல்கொள்ள வல்லாருக்கே பூதங்கள் வசமாகும். பிறகு பையனை நோக்கி, 'மகனே, நான் விளக்கைக் காத்திருக்கும் பூதம், என் தோழர்களும் சிலர் உண்டு, நீ இட்ட கட்

டளையைச் சிரமேற்கொண்டு செய்ய நாங்கள் ஸித்தமாக இருக்கிரேம்' என்றது பூதம்.

'கஞ்சி வரதப்பா' என்று ஒருவன் காஞ்சிமா நகரில் எழுந்தருளியிருக்கும் வரத ராஜனை ஸ்தோத்திரம் செய்யக்கேட்ட பகற் பட்டினிக்காரன் ஒருவன், 'கஞ்சி எங்கு வருகிறது அப்பா,' என்று கேட்டான் என்று கேட்டிருப்பீர்களே. அதுபோலவே, இவ் அலடினிக்குப் பசித்த ஸமயமானபடியால் 'எங்களுக்குச் சோறு கொண்டுவா' என்று பையன் கேட்க, உடனே, 'ஷட்ரஸோ பேதம்' என்று சொல்லுகிற அறு சுவையுண்டியைப் பன்னிருவெள்ளித்தட்டில் பூதம் ஏந்திக் கொணர்ந்து முன் வைத்தது.

பூதங்கள் தோன்றிய வரலாறு இப்போதுதான் இவர்களுக்குப் புலப்பட்டது. புலப்படவே 'க்ஷுத்பாதை' என்று சொல்லுகிற பசி நோய் மேலிட்டபோதெல்லாம் இவர்கள் விளக்கைத் துடைக்கத் துடைக்க, அதினின்றும் பூதம் வெளிப்பட, பேதாளத்தை வேலை ஏவினுற்போல, இவர்களுக்கு வேண்டுவனவெல்லாம் கொண்டுவரச்சொல்ல, அதுவும் சலிப்புச் சிறிதுமின்றி இணங்க, இன்மை, வறுமை, குறைவு முதலியமுற்றும் நீங்கி, ஆசைக்கு அளவு இல்லையாதலால், சும்மா கிடைத்தால் எனக்கு ஒன்று, தம்பிக்கு ஒன்று என்று கேட்பது உலக வாடிக்கையானபடியால், மனத்துக்குத் தோன்றியது, வாய்க்கு வந்தது எல்லாம் கேட்டு, அவ்வாறே பெற்று, ஸுகமாக வாழ்ந்து வந்தார்கள்.

பரிச்சேதம் 4.

அரசன் மகளை மணம்புரியப் பரிசம்போட்ட படலம்.

[சீனு தேசத்துக் கடைகள் மூடியிருக்கக் காணல்—உண்டான அதிசயம்—மர்மம் தெரிதல்—அரசியை ஒதுக்கிடமிருந்து கண்ணுற்றல்—காதல் கொளல்—பூதத்தை ஏவி பேடிஸாமான் பெறல்—அன்னையைப்பரிசுடன் அரண்மனைக்கு அனு

ப்புதல்—பேடி காணமுடியாமை—கிழவியைக் கண்ணுற்ற அரசன் மந்திரியை வினவுதல்—மறுஸமயம் வந்தால் தன்னிடம் இட்டுவர ஏவல்—அரசன் ஸந்நிதானம் அம்மை வந்த செய்தி தெரிவித்தல்—பரிசைக் கண்டு களித்து மனம் இணங்கல்—அமைச்சன் பானகத்துரும்பு ஆகுதல்—மூன்று மாதத்தவணை சொல்லி அம்மையை அனுப்பிவிடல்.]

ஒருநாள்தினம் பட்டணத்துக் கடைகள் எல்லாம் காலை வேளையில் சாத்தியிருப்பதை அலடின் கண்டான். காரணமோ தெரியவில்லை; விசாரித்ததில். அரசன் மகள் ஸ்நானத்திற்கு புறப்படப்போகிறபடியால், அவள் திரும்பிவரும் வரையில் கடைகளை மூடிவைக்கும்படி அரசன் ஆணை பிறந்திருக்கிறது. என்று அவனுக்குத் தெரியவந்தது. உடனே அரசனது மகளைக் கண்டு களிக்க உள் அவாக்கொண்டான். பார்ப்பது எப்படி? கோஷா ஸ்திரீ ஆயிற்றே, தெரிந்தால், அரசன் கண்ணைப் பிடுங்கிவிடுவானே, முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல் ஆசை பிறந்துவிட்டது. பிறக்கவே. ஒளிந்திருந்து, திருட்டுத்தனமாகப் பார்த்துவிடுகிறது என்று தீர்மானித்து, அங்ஙனமே ஓர் ஒதுக்கிடத்தில் ஒளிந்திருந்து பார்த்து ஒருவாறு ஆத்ம திருப்தி அடைந்தான்.

விஷயங்களிலே இறங்கினால் மேன்மேலும் அவா எழுமே ஒழிய, பார்த்த அளவு நிற்குமோ? பிறகு அவளை மணம்புரிய வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. ஆசைக்கு அளவு ஏது? உண்டான எண்ணம் விரைவில் ஈடேறுவது அஸாத்தியமானதால் உள்ளம் கொதித்தது. வ்யாகூலம் மேலிட்டது. அகத்தின் அழகு முகத்தில் தெரியுமன்றோ? அடுத்தது காட்டும் பளிங்கு போல், கடுத்தது காட்டும் முகம், என்று பெரியோரும் கூறியுள்ளார். இவன் முகம் வாட்டம் கண்டது. உடல் சோர்ந்தது. க்ருசமாக இளைத்தான். அன்னம் வரவரத் தள்ளுபடி ஆயிற்று: தனக்குத் தெரிந்தவரையில் அன்னை வைத்தியம் செய்தாள். பயன்படவில்லை: மனோவ்யாதியை இந்த மருந்தெல்லாம் கேட்குமோ? பிறகு, மகனை அம்மை விசாரித்தாள். இவன் தன் எண்ணத்தை வெளியிடவே, அடா, பைத்தியக்காரா, இதெப்படி,

அடா, முடியும்,' என, 'அம்மா பயப்படாதே, முடியும், உபாயம் இருக்கிறது, நான் சொல்வதுபோல் மாத்திரம் நட. உன்னிடத்தில் சொல்ல ஸங்கோசப்பட்டேனே ஒழிய வேறு அன்று,' என, என்ன செய்யவேண்டுமென்று அன்னை வினவினள்.

உடனே, ஏகாந்தமாகத் தன்னறையில் சென்று, விளக்கைத் துடைக்கப் பூதம் தோன்றிற்று. உயர்ந்த நவரத்தினங்கள் நிறைந்த பொற்றட்டுகள் வேண்டுமென, அவ்வாறே அது கொண்டு வந்து தந்தது.

பின்பு, 'அம்மா. இவற்றை எடுத்து, அரசன்பாற் சென்று, அரசன் மகளுக்கு இவற்றை நான் பரிசு தந்ததாகச் சொல்லி, என் எண்ணத்தையும் இராஜனுக்கு அறிவித்து, அவரது அபிப்பிராயம் தெரிந்துவா,' என்ருன்.

பிள்ளையருமை பற்றி, இசையாது என்று தோன்றிய காரியத்தையும் செய்ய இசைந்தாளாஞலும், போனவிடத்தில், அரசன் ராஜ்யகார்யத்தில் அமர்ந்திருந்தபடியால், அவரைப் பார்க்க முடியாமற் போயிற்று. ஆனல், இவள் நின்றதுமாத்திரம் ஒதுக்கிடமில்லை; யர்வர் கண்ணிலும் விழும்படியான பைரங்கமான விடம்.

பிறகு, வீடுவந்து சேர்ந்து, மகனுக்கு நடந்ததைச் சொல்லப் பின்னும் மறுநாள் போய் வரும்படி அவன் கேட்டுக்கொள்ள, அவளும் அதற்கு உடம்பட்டாள். அன்றும் அரசன் பேட்டி ஆகவில்லை.

இவ்விதமாக சிலநாள் விடாது போய் வந்தபடியால், அரசன் அவஸரத்தோடு அவஸரமாக இவளையும் கவனித்து வந்தான். வரவே, மந்திரியைக் கூப்பிட்டு, 'அங்கு நமது ஸபையில் 'தர்பார்' கூடும்போதெல்லாம் ஒருத்தி துணியில் ஏதோ மூடிக்கொண்டு வந்து தினந்தோறும் நின்றுவிட்டுப் போகிருளே, அவள் அடுத்த ஸமயம் வந்தால், அவளை என்னிடம் அழைத்து வாரும், விசாரிப்போம்,' என்ருன்.

மறுநாட் காலையில் வழக்கம்போல் இவள் கொலுமண்டபம் வர, அமைச்சன் இவளை அரசன் அண்டை கொண்டுபோய்விட,

அவன் விசாரிக்க, இவள் வந்தசெய்தி இன்னதென்று தெரிந்து கொண்டு, கோபம் சிறிதுமின்றி, 'ஏ, மாதே, அத்தனுவத்தில் என்ன முடிந்துவைத்திருக்கிருய்' என்று கேட்டான்.

கேட்கவே, மூட்டையை அவிழ்த்து உள்ளிருந்ததைக் காட்டினுள். பளபளவென்று தேஜோமயமாய் நவரத்தினங்கள் ஜொலிக்கக் கண்டான். கண்குளிரப் பார்த்தான். தன் அரண்மனையிலும் இதுபோல் சிறந்த மணிகளில்லை எனத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அங்கு உள்ளோருக்கு இவற்றின் அழகைக் காட்டினுன். அவற்றின் நீரோட்டத்தைக் கண்டு மெச்சினுன். 'இவ்வழகான பரிசு கொடுக்க வல்லவனுக்கு என் மகளைக் கலியாணம் செய்து தரலாகாதா' என்று கேட்கத் தலைப்பட்டான். இப்படி சொல்லிக்கொண்டேதான் அந்தப்புரம் போய்த் தன் பட்டமகிஷியினிடம் அவற்றைக் காட்டினுன்.

அரசன் மொழியைச் செவி சாற்றிய மந்திரி வெகு தந்திரி. தன் மகனுக்கு அரசன் மகளை மணம் செய்து வைக்கவேண்டும் என்ற உட்கருத்துக் கொண்டவனுனதால், அரசன் திரும்பிவந்தவுடன், 'ஐயா, சற்று நிதானித்தால் நலமாகும், மூன்று மாதம் கழித்து விவாகம் நடத்தலாம் என்று சொல்லி அனுப்பினுல், பிறகு நடக்க நடக்கப் பார்த்துக்கொள்வோம்; அவஸரமாகப் பதறி ஒரு கார்யமும் செய்யலாகாது. இவள் மகன் சரித்திரம் நமக்குப் பிரஸித்தமாகத் தெரியாதே, தீர விசாரிப்போம், ஆய்ந்தோய்ந்து செய்யாக் கார்யம் தான் சாக மருந்து உண்பது ஆகும்' என்ருன்.

மந்திரி சொல்வதும் ஸரி என்று நினைத்து, அரசன், வந்த அம்மைக்கு 'பிறகு ஆகட்டும், மூன்று மாதம் போகட்டும்.' என்று வாக்குப்போக்கி, அவளையும் அப்பால் போக்கினுன்.

வீடு வந்து சேர்ந்த அன்னை வாயினுல் நடந்த செய்தி எல்லாம் சவிஸ்தாரமாகக் கேட்டு, அரசன் உடன்பட்டான் என்று அவன் உட்பொருளறியாது ஆனந்தக் கூத்தாடி, பரவசமாகி ஆநந்தஸாகரத்தில் மூழ்கிக்கிடந்து, ஒருநாள், இரண்டுநாள் என்று கணக்கிட்டு, வாரம், மாதம் எனக்கழித்து, ஒரு நாழிகை ஒரு

யுகம்போலப் போக்கி, குறித்த காலம் கிட்டியது என்று மகிழ்ச்சி கூர்ந்தான். இவ்வளவு பாக்கியமும் தன் தாயினால் கிடைத்தது என்று அவளை ஸ்தோத்திரம் செய்தான்.

பரிச்சேதம் 5.

மந்திரி முயற்சி பழுதுபட்ட படலம்.

[மந்திரி மகிழ்தல்—தன் மகனுக்குப் பெண் கேட்டல்—அரசன் அம்மைக்களித்த வாக்கை மறத்தல்—அமைச்சனுக்கு இணங்கி நாள் குறித்தல்—ஊர் அலங்கரித்தல்—தற்செயலாய் பட்டணம் வந்த அலடின் செய்தியறிதல்—வீடுவந்து, பூதம் ஏவி, வதுவரர்களைத் தூக்கி வரச்செய்தல்—ஜோடி பிரித்தல்—மந்திரி மகனைச் சிறையிடல்—இராஜகுமாரிக்கு தன் கருத்தை வெளியிடல்—பூதத்தைச் சேஷ்டை செய்யச் சொல்லல்—இருப்பிடம் சேர்ப்பிக்க ஏவல் கொளல்—கல்யாணம் நின்றது.]

அரசன் மகளை வந்த விதவை மகனுக்கு கல்யாணம் செய்ய விடாது தடுத்தோம் என்று எண்ணிக் களிப்புடனே, அமைச்சன், தன் மகனுக்கு அரசன் மகளைக் கேட்க, அவ்வரசனும் கிழவிக்குச் செய்திருந்த வாக்குத்தத்தத்தை முற்றும் மறந்தவனாகி இணங்கி, கலியாண முகூர்த்தத்திற்கு நாள் வைத்து, நாடெங்கும் தோரணம் கட்டி, ஆடல் பாடல் விருந்து முதலியவற்றை விமரிசையாக நடத்தினான்.

தற்செயலாய் கடைவீதிக்குச் சரக்கு வாங்கவந்த அலடின் தாய் இச்செய்தி கேட்டுத் திடுக்கிட்டு, மகனுக்கு வந்து சொல்ல, அவன் உள்ளே சென்று தன் பூதத்தை வழக்கம்போல் வரவழைத்து, மணாளனையும் மணாட்டியையும் அப்படியே தூக்கிவர ஏவ, அப்பூதமும் இருவரையும் அலடின்முன்பு கொணர்ந்து நிறுத்திற்று. மணாளனை மறுநாள் காலைவரையில் தனிக் காவலில் வைத்து வைக்கும்படி ஏவினான். அரசன் மகளைமட்டும் கண்டு தன் காதலை அவளிடம் தெரிவித்துவிட்டுப் பிறகு பூதத்தை வரவழைத்து இருவரையும் அவரவர் இடம் கொண்டுபோய்ச் சேர்க்க

உத்திரவு அளித்தான். அரண்மனை வந்துசேர்ந்ததுமுதல் இராஜ குமாரி பித்துப்பிடித்தவள்போல் இருந்தாள்.

விருந்து முடிந்தபிறகு மணம் செய்விக்கத் தன் மகளைக் காணுது ஏங்கித் திகைத்து நின்ற அரசன், மகள் வரவைக் கண்டு, அவள் சித்த ப்ரமைகொண்டிருப்பது தெரிந்து, அரசன் காரணம் வினவினன். அதற்கு அவள் தனக்கு உற்றதையும், பூதச்சேஷ்டையையும் தகப்பனுக்கு அறிவிக்க, அவன் அதை அமைச்சனுக்குத் தெரிவித்தான். இதற்கு ஸமாதானம் ஒன்றும் சொல்லாமலே மந்திரி தன் மகனுக்கு நேர்ந்ததைத் தெரிவித்தான். உடனே அரசன் சகுனமும் நிமித்தமும் நன்ருகவில்லை எனத் தெரிந்து கலியாணத்தை நிறுத்திவிட்டான்.

பரிச்சேதம் 6.

அஸாத்தியமும் ஸாத்தியமான படலம்.

[தவணை கழிவு—அம்மை அரண்மனையில் தோன்றல்—அமைச்சன் செய்த இடையூறு—அரசன் அஸாத்தியப் பரிசு வேண்டல்—அம்மை ஏக்கம்பிடித்துத் திரும்பல்—பூத உதவி பெறல்—வேண்டிய பரிசுடன் அம்மையை இராஜக்கிரகத்திற்குத் திரும்ப அனுப்புதல்.]

பிறகு மூன்று மாதமும் முறையே கழிந்தன. கிழவியும் கொலுமண்டபம் வரத்தொடங்கினுள். மந்திரி தன் மகனுக்குக் கலியாணம் இல்லாமற்போனுலும் போகட்டும், இக்கிழவி மகனுக்குக் கலியாணம் செய்துவைக்கிறது இல்லை என்ற திட மனத்தனுகி, அரசனுக்கு ஓர் உபாயம் சொன்னுன். 'ஐயா, இக்கிழவியை இனி இங்கு வர இடம் தரல் ஆகாது, வரவைத் தடுக்கவேண்டும், அதற்கு ஒரு உபாயம் சொல்லுகிறேன் கேளும். அஸாத்தியமான செயல் ஒன்று செய்துவந்தால் பிறகு மகளை மணம்புரிவித்துத் தருவதாகச் சொல்லிவிடும். அவள் நின்றுவிடுவாள்' என்ருன்.

அரசனும் அப்படியே தன் மகளுக்குப் பரிசு நாற்பது பொற்றட்டு நிறைந்த நவரத்தினங்கள் வேண்டுமென்றும், அவற்றை நாற்பது கரிய அடிமை வேலைக்காரர் ஏந்திவரவேண்டுமென்றும், இவர்களுக்கு மெய் காவலாக ப்ரகாசமேனியர் கூட வரவேண்டும் என்றும், எல்லோரும் நல்ல பீதாம்பரங்கள் உடுத்தியிருக்கவேண்டுமென்றும், அப்போதுதான் தன் மகளை விவாகம் செய்துகொள்ளமுடியும் என்றும் அரசன் அம்மையிடம் சொல்லி அனுப்பி விட்டான்.

இனி இக்கலியாணம் தன் மகனுக்கு நேராது என்று உணர்ந்து கொட்டாவி விட்டு, பெருமூச்செறிந்து மகனுக்கு வந்து சொல்ல, அவன் ‘அம்மா, அது கிடக்கிறது, இது ஒரு ப்ரமாதமா, இவ்வளவும் ஒரு நொடிப்பொழுதில் விசுவாமித்ர ஸ்ருஷ்டிபோல் வரவழைக்கிறேன் என்று சொல்லி, உள்ளே சென்று விளக்கைத் துடைத்து பூதத்தை வரவழைத்து ஏவி, ஸகல ஸம்பத்தும் பெற்று, அம்மைமுன்பு கொணர்ந்துவைத்து அரசன் மாளிகைக்கு எடுத்துச் செல்லும்படி சொன்னான்.

பரிச்சேதம் 7.

மணம்புரி படலம்.

[பரிசின் வரிசையும், ஊர்வல விமர்சையும்—அலடின் மணக்கோலம் - கொலுமண்டபம்—திருமணம்- ஸமாராதனை—ஆடல் பாடல்—வாண வேடிக்கை—அரசன் தன்னில்லத்திலேயே மருமகனை இருக்க வேண்டல்—இணங்காது தனி மாளிகை சோடித்தல்—கட்டிடக்குறைவு—அரச கர்வபங்கம்—ஸுக வாழ்வு.]

இவ்வூர்கோல வரிசையைக் கண்டு களிக்க எத்தனையோபேர் திரள் திரளாகக் கூடி வந்தார்கள். விமர்சையாகக் கொணர்ந்தவற்றை அரசன் ஸந்நிதியில் கிழவி வைத்து இனியாவது தன் மகன் விவாகத்திற்கு உத்திரவாகவேண்டுமெனக் கேட்டுக்கொள்ள, அதற்கு அரசன், ‘எனக்கு வெகு ஸந்தோஷமாயிற்று. உன்

மகன் வரவை எதிர்பார்த்து வாசற்படியிலேயே நிற்கிறேன்' என்று போய்ச் சொல்லி அழைத்துவா' என்றான். அவளும் அங்ஙனமே தன் மகனுக்கு வந்து தெரியப்படுத்தினாள். இச்செய்தி கேள்வியுற்ற அலடினுக்கு ஓர் உடம்பு ஈருடம்பு ஆகிவிட்டது. வழக்கம்போல் பூதத்தை வரவழைத்துத் தனக்கு திவ்விய மங்கள ஸ்நானம் செய்து வைக்கச்சொல்லி, அது ஆனபிறகு நல்ல, பட்டு பீதாம்பர ஆடை தரச்சொல்லி, உடுப்ப உடுத்து, பின் பூசுவ பூசி, மாப்பிள்ளைபோல் விளங்கினான். தான் மணக்கோலம் பூண்டபிறகு, தன் அன்னைக்கும் திவ்விய ஆடை தந்துதவச் சொல்லி, இன்னும் வேண்டிய இஷ்டமித்திரர்களையும் பந்து ஜனங்களையும் கூட்டிக்கொண்டு அலங்காரமாகவே, மணக்கோலத்துடன் ஊர்வலமாக வந்து கொலுமண்டபத்திற்கு அருகில் கலியாணக்கூடத்தில் வந்து தோன்றினான். உடனே மங்கள வாத்தியம் கோஷித்தது. விவாகம் சுபமுகூர்த்தத்தில் விதிப்படி நடந்தது. ஸகலரும் ஆசி கூறினார்கள். பலமான விருந்து நடந்தது. பாட்டுக்கச்சேரி, நர்த்தனம், விகடம் முதலிய தமாஷ்களும் முறையே நடந்தன. இரவில் வாணவேடிக்கைகளும் கிரமமாக நடந்தன.

பின்னர் அரசன் தன் மருமகனை அரண்மனையிலிருக்கச் சொல்ல, அதற்கு அலடின் இணங்காமல், தன் அந்தஸ்துக்குத் தக்க ஒருமாளிகை நிர்மாணம் செய்து அதில் வஸிக்கப்போகிறதாகச் சொல்லி விடை பெற்று, தன் இல்லம் வந்து அடைந்தான். அடையவே, தன் பேதாளத்தை வழக்கம்போல வரவழைத்து ஆக்ராவில் கட்டியிருக்கிற தாஜமகால்போல் நவரத்தினங்களும் இழைத்து வெள்ளை ஸலவைக்கற்கள் பரப்பி நல்லதொரு மாளிகை நிர்மாணம் செய்துதரக் கேட்கவே, இச்சாமாத்திரம் ஸ்ருஷ்டி என்றாற்போல் ஓர் இரவில் கட்டிடம் முடிந்தது. அரசன் கர்வத்தைப் பங்கப்படுத்தக் கருதி, ஒரு பலகணிமட்டும் வேலை குறைவாக விட்டுவைக்கச் சொல்லியிருந்தான். இக்குறையைக் கண்ணுற்ற அரசன் அதைப் பூர்த்திசெய்யக் கருதி அமைச்சனைக் கூப்பிட்டு அதை விரைவில் முடிக்கவேண்டும் என்றும் மற்றச் சன்னல்கள் அந்தஸ்துக்குக் குறையக்கூடாதென்றும் கட்

டனையிட்டான். மந்திரி அரண்மனைச் செல்வம் முற்றுங்கொண்டு கற்கள் வாங்கி இழைத்துச் செதுக்கி அலங்கரித்தும் இதர பாகங்களுக்கு ஏற்ப இவ்வேலை முடியாததுகண்டு, வெட்கித் தலை தொங்கலிட்டான். பிறகு தன் பேதாளத்தைக் கட்டிடப் பூர்த்திசெய்ய ஏவ, அதுவும் குறைவை நிரப்பிக்கொடுக்க, அலடின் தன் இஷ்ட மஹிஷியுடன் ஸுகமாக வாழ்ந்துவந்தான்.

பரிச்சேதம் 8.

கலி தொடர் படலம்.

[உயர்தர பதவிக்குத் தக்க வழக்கங்கள்—வேட்டை ஆடல்—அலடினது நூதன பதவியை மாந்திரீகன் தெரிந்துகொளல் புதிய விளக்குக் கொளல்—விளக்குப் பூதத்தை ஏவி, அரண்மனையை உள்ளிருந்தவரோடு ஆப்பிரிக்கா கண்டம் சேர்த்தல்—அலடின் வேட்டையாடித் திரும்பல்—மாளிகையைக் காணுது ஏங்கி நிற்றல்—அமைச்சன் ஏச்சும் சூழ்ச்சியும்—அலடின் சிறைப்படல்—தவணை கேட்டுக்கொளல்—சிறை மீட்சி—மோதிரப் பூத வரவு—அரண்மனையைத் தூக்கி வர ஏவுதல்—அது முடியாமை —அலடினைத் தூக்கி ஆப்பிரிக்கா சேர்த்தல்.]

அலடினுக்கு உயர் பதவி வரவே, உயர்தர வாடிக்கைகளும் ஏற்பட்டன. இதுவும், என்ன, முன்போல் சோற்றுக்குத் தாளம் போடுகிற காலமா? அது எங்கே வந்தது? அரசன் மகளைக் கட்டினபிறகு அரசருக்குரிய மேம்பாடுள்ள பழக்கங்களும் கிரமமாக ஏற்பட்டுவிட்டன. காடுகளுக்குப் போய் வேட்டையாடத் தலைப்பட்டான். ஒரு தடவை திரும்பி வர ஒரு வாரகாலமாகிவிட்டது.

இவன் ஊரிலில்லாத காலத்தில் மாளிகையில் ஓர் அதிசயம் நேர்ந்தது. உலை வாயைத்தான் மூடலாம், ஊர் வாயை யாரால் மூடமுடியும்? அலடின் சோற்றுக்கு அழுது தண்ணீருக்குத் தவித்தவன். தரையில் கிடந்தவன், இவன் இப்போது தரையி

விருந்து பாய், பாயினின்று ஹம்ஸதூளிகா மஞ்சத்திற்கு வந்து விட்டான். சயனபோகம் நிரம்பக் கிடைத்துவிட்டது. அன்னமும் காடிக்கஞ்சியினின்று அறுசுவையுண்டியாக மாறிவிட்டது. ஊரொங்கும் இதே பேச்சாகத்தானிருந்தது. இவன் காரியம் வெள்ளிடை மலைபோல் விளங்கிற்று. காரணம் மாத்திரம் தெரியவில்லை. இச்செய்தி எல்லாம் பழைய மந்திரவாதி காதில் விழுந்தது. அவன் இதன் இரகஸ்யத்தை நன்கு உணர்வான். மெல்ல இவன் அரண்மனை அண்டை வந்துசேர்ந்து இவன் ஊரில்லை என்கிற செய்தியை துப்பு அறிந்து, ஓர் உபாயம் செய்தான்.

கடைக்குப்போய் புதிய விளக்கு ஒரு 'டஜன்' வாங்கிக் கொண்டு 'பழைய விளக்குத் தந்தால் புதிய விளக்கு கொள்ளலாம்' என்று வீதிவழியாக மாந்திரீகன் கூவிச் சொன்னான். அலடின் மனைவிக்கு இது அதிசயமாக இருந்தது. இவன் பைத்தியக்காரனோவென்று சங்கித்தாள். உடனே பிள்ளைகள் கூட்டங் கூடினார்கள். பணக்காரனோடு பத்துபேர், பைத்தியக்காரனோடு பத்துப்பேர் என்று கேட்டதில்லையா? இப்படியும் ஒரு மூடன் உண்டாவென்று இராஜ குமாரி திகைத்தாள். ஆதாயமில்லாத செட்டி ஆற்றோடு போவானா? தான் சாக மருந்து உண்பான் உண்டோ, அதில் ஏதோ ஸூக்ஷமம் இருக்கிறது என்ற நுண்ணறிவு இவளுக்கு உண்டாகவில்லை. வ்யாபாரி பேசுவது யதார்த்தமாவென்று பரீக்ஷை செய்யவேண்டுமென்று எண்ணம் உண்டாயிற்று. "விநாசகாலே விபரீத புத்தி." நாம் என்ன செய்யலாம். சேடியை அழைத்து, உள்ளே பழைய விளக்கு ஏதாவது இருந்தால் எடுத்துவா, என்று ஏவ, அவள் சடிதியில் உள்ளே போய் அலடின் அறையிலிருந்த விசித்திர விளக்கை, அதன் மகிமையை உணராதவளாகி, எடுத்துவந்து வ்யாபாரி கையில் கொடுத்தாள். உடனே, அவர்களுக்கு வேண்டியதொரு புதிய விளக்குக் கொடுத்துவிட்டு அப்புறம் சென்றான்.

ஆண்டி சுற்றினது கம்பளி மூட்டைக்குத்தானே, இனி இவனுக்கு விளக்கு விற்பானேன்? தெருக்கோடி சென்றவுடன், விளக்கை, கிடைக்காத பாக்கியம் இன்று கிடைத்தது, என்று

துணிக்குள் ஒளித்துவைத்தான். தன் வீட்டைப் பார்க்க எடுத்தான் ஒட்டம். யதாப்ரகாரம் அதைத் துடைத்தான். பூதம் கிளம்பிற்று. 'அலடின் அரண்மனையை அப்படியே அலக்காகத் தூக்கி இருந்தவிடம் தெரியாமல் கண்ணுக்கு எட்டாத ஆப்பிரிக்காக் கண்டத்திலே கொண்டுபோய்ச் சேர்க்கக்கடவாய்,' என்று ஏவல் கொள்ள க்ஷணிகநேரத்தில் அவ்வாறே செய்துவிட்டது.

அலடின் வேட்டையாடித் திரும்பினன். வந்து பார்த்தான். தன் மனையையும் மனைவியையும் காணமல் திகைத்து நின்றான்.

இவ்வதிசயத்தைக் கண்ட மந்திரி, அரசனிடம் சொல்லி, கோபமூட்டி, அலடின் திரும்ப வந்தால், அவனைப் பின்கட்டு முறையாகச் சிறைப்படுத்தவேண்டும் என்றான்.

அரசனுக்குத் தன் மகளைக் காணமே என்ற ஆத்ரம். அமைச்சனுக்கு தன் மகன் கலியாணத்திற்கு விக்னம் வருவித்தவன் என்ற க்ஷாத்ரம். ஆகவே, இருவரும் கலந்து யோசிக்கவே, தீயும் காற்றும் கலந்தாற்போல் ஆயிற்று.

புண்ணில் கோலிட்டாற் போலவும், புண்ணில் புளிப் பெய்தாற்போலவும், அமைச்சன், 'அப்போதே அவஸரப்படவேண்டாம். ஏதோ மோசமிருக்கிறது, நிதானிக்கவேண்டும் என்று சொன்னேனே,' என்று இடித்துக்காட்டினன். அரசனுக்கு ஆத்ரம் பொங்கிவிட்டது. அலடின் ஊர் வந்து சேர்ந்தானே இல்லையோ, உடனே, அவனை வாரண்டில் பிடித்தார்கள். அரசன் முன்பு கொண்டுபோய் நிறுத்தினர்கள்.

'ஐயோ, நான் ஒரு அபராதமும் செய்யவில்லையே, விட்டுவிடுங்கள்' என்று அலறினன்.

'அபராதமும் இதைவிட வேறு என்னவேண்டும், அரண்மனை எங்கே, என் மகள் எங்கே,' என்று உசாவினன்.

'ஐயா, பதறலாகாது, பதருத காரியம் சிதருது, சற்றுப் பொறுங்கள். என்னை மன்னியுங்கள். எனக்கு நாற்பதுநாள் வாயிதா தாருங்கள். இம்மாயத்தை வெளிப்படுத்துகிறேன். இல்லாவிடில், நானே நேரில் வந்து ஆஜர் ஆகி, விதிக்கும் தண்டனைக்கு உள்ளாகிறேன். நான் சொல்வது ஸத்தியம், ஸத்தியம்,' எனக் கூறி உறுதி மொழி தந்தான்.

இவனைக் கட்டிவைத்து அடிப்பதில் பயனில்லையே, ஆன காரியம் ஆகிவிட்டது, இனி இவனுக்கு வாயிதா தந்தால் வெளிப் படுத்துவதாகச் சொல்லுகிறான். அதனால் இவனும் அறியாமல் நடந்திருக்கிற காரியம் இது. அவன் சொல்லுவதையும் கேட் போம், என்று அவனை விட்டுவிட்டான்.

விடவே, தன் பழைய அன்னை வீடு வந்து சேர்ந்து, கை மோதிரத்தைத் தேய்த்தான். அதன் பூதம் வெளிப்புறப்பட் டது. தன் மனைவியுடன் தன் அரண்மனையை யதாஸ்தானம் கொணர்ந்து சேர்க்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டான்.

அதற்கு அது 'ஐயா, இது என்னால் இயலாது. அரண்மனை யைத் தூக்கிச் சென்றது விளக்குப் பூதம். அது என்னைவிட பலமான தேவதை. என்னால் ஒன்று முடியும். வேண்டுமானால் உம்மை அங்கு கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன், அது என் னால் ஆகும்' என்றது.

'ஸரி, அப்படியே செய்க' என்று அலடின் இணங்க, உட னே நொடிப்பொழுதில் கண்மூடிக் கண் திறப்பதற்குள் ஆப்பிரிக் காவில் தான் இருக்கக் கண்டான்.

பரிச்சேதம் 9.

கலி நீங்கு படலம்.

[ஆப்பிரிக்கா—அரண்மனை—பலகணி—மனைவி காணல்—மாந்திரீ கன் நிலைமையையும் செய்யும் உபத்ரவத்தையும் அறிதல்—மனைவிக்குச் சொன்ன போதனையும் சூழ்ச்சியும்—மாந்திரீ கன் எண்ணத்திற்கு இணங்கி, அவனைக் குடிக்க வேண்டல்—அவன் இணங்கிக் குடித்து மரணம் அடைதல்—அலடின் விளக்கை கைப்பற்றல்—பூத வரவு—மாளிகை பறத்தல்—இருப்பிடம் சேர்தல்—ஸுக வாழ்வு—தெய்வாதீனம்.]

அலடின் ஆப்பிரிக்காவில் வந்து சேர்ந்த மாத்திரத்தில் பங் களா எதிர்பட்டது. ஆனால் கதவுகள், பலகணிகள், வாசற்படி கள் எல்லாம் மூடியிருந்தன. இவனுக்கு நற்காலம் கிட்டியதால், தற்செயலாய் இராஜகுமாரி ஒரு சன்னலைத் திறந்து வெளியே

எட்டிப் பார்த்தாள். இவன் நிற்பதைக் கண்டு சைகை காட்டிக் கூப்பிட, இவனும் கிட்ட நெருங்கி, தன் மனைவி தான் என்று தெரிந்து 'ஏ, அருமைக் கண்ணாட்டி' நான் அலமாரியில் வைத்திருந்த விளக்கு எங்கே' என்று வினவ, அதற்கு அவள், 'ஐயா, தேவரீர் திருவடிகளில் தெரியாத்தனமாக அபசாரப்பட்டுவிட்டேன்போலிருக்கிறது. அந்த விளக்கை எடுத்து ஒரு வ்யாபாரியிடம் கொடுத்துவிட்டேன். அதைவிட்டுப் பிரிந்தகாலமுதல் தான் எனக்கு அவஸ்தைகள் ஏற்பட்டனபோலும்' என்றாள். அவ்வியாபாரி எங்கேயென, 'அதோ படுத்து இருக்கிறான், அவனை நான் மணம்புரிய வேண்டுமாம், என்னை பலாத்காரம் செய்கிறான்; நான் உடம்பட்டால் ஒழிய என்னைக் கொன்றுவிடுவானும்' என்று சொல்லித் தேம்பி அழுதாள்.

'விளக்கு எங்கே வைத்திருக்கிறான்' என்று திரும்பவும் அலடின் வினவ, 'சண்டாளன் தன் மார்பண்டைத் துணியில் மறைத்து ஒளித்து வைத்திருக்கிறான்' என்றாள்.

அதற்கு அலடின் 'கண்மணி, நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன், அதன்படி நட, காரியானுகூலம் ஏற்படும். அவன் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னால் அதற்குத் தடுத்துச் சொல்லாதே. மனமிருப்பதாகவே நடி. பகையாளிக் குடியை உறவாடித்தான் கெடுக்கவேண்டும். அவனை ஓர் வரம் மாத்திரம் கேட்டுக்கொள். விவாஹ காலத்திற்கு முந்தி ஸம பந்தியில் உட்கார்ந்து குடிக்கவேண்டும், என்று வேண்டிக்கொள். இதென்ன ப்ரமாதமா, ஆகட்டும், என்று வாக்குத்தருவான். வாசல் கதவு திறந்திருக்கட்டும், வேலைக்காரியில் ஒருத்தியை சற்று என்னுடன் அனுப்பு. அவளிடம் ஒரு பொருள் கொடுத்து அனுப்புகிறேன். அதை வ்யாபாரி குடிக்கும் கிண்ணியில் அவனறியா வண்ணம் சேர்த்துக் கொடுத்துவிடு. அதைக் குடித்தவுடன் மயங்கிக் கீழே விழுந்துவிடுவான். விஷம் தலைக்கு ஏறிவிடும், உயிர் நீங்கிவிடும்' என்றான்.

இதுகேட்ட ஸுந்தரி, மனம் உவந்தவளாகி சேடியை வெளியே அனுப்பினாள். அலடினும் தேவதையை வரவழைத்து விஷம் கொண்டுவர ஏவ, அதுவும் உடனே கொணர்ந்து தந்தது.

அதைச் சேடிபெற்று, எஜமானிகையில் கொடுக்க, அவளும் அதைச் சேர்த்து பானம் தயார் செய்தாள்.

மந்திரவாதியும் கண் விழித்துக்கொண்டு பழையபடி விவாகம் பண்ணிக்கொள்ள அனுமதி கேட்க, இராஜ குமாரியும் இணங்கி ஒரு வரம் கேட்கலானாள்.

'ஸரி' என்று அவனும் உடம்பட, அவனுக்குப் பானத்தைத் தர, அதைக் குடித்துக் கீழே மயங்கி விழுந்து உயிர் துறந்தான்.

உடனே திறந்துவைத்திருந்த வாசல் வழியாக உள்ளே நுழைந்து, அவன் மார்பண்டை ஒளித்து வைத்திருந்த விளக்கை எடுத்துக்கொண்டு, அதன் உதவியால் பேதாளத்தை வரவழைத்து, திரும்பவும் இவ்வரண்மனையை அதிலுள்ளவர் உள்பட அப்படியே தூக்கி யதாஸ்தானம் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி அதனை வேண்ட, அதுவும் அப்படியே சேர்த்துவிட்டது.

பார்த்தான் அரசன், அளவிறந்த ஆநந்தக்கடலில்மூழ்கினான். பரவசமானான். மாப்பிள்ளையிடம் மதிப்பு மிகுந்தது. இனி ஒரு குறைவுமின்றி, மக்கள் பெற்று பெருக வாழ்ந்து ஸுகமாக இல்லற தர்மத்தை நடத்திவந்தார்கள்.

தெய்வ பலமே பலம்.

தெய்வமே துணை.

முற்றிற்று.

பரிச்சேதம் 1.

1 முன்னொரு காலம்
2 தலைநகர்
3 துர்ப்பாக்கியம்
4 † நிர்பாக்கியம்
5 தகப்பனில்லாப்பிள்ளை
6 † தாயில்லாப்பிள்ளை
7 மேலிடுகிறது
8 ஸம்பாதித்துப் போடுகிற [புருஷன் (ப. பொ)
9 புருஷன் போகிறது (ப. பொ.)
10 காலக்ஷேபம்
11 பாடு படுகிறது
12 * காக்கைக்குத் தன் குஞ்சு [பொன் குஞ்சு
13 கூலிவேலை
14 நாள் ஒரு மேனியும் பொழு [து ஒரு வண்ணமும்
15 பையன் நல்லவன் (ப. பொ)
16 கார்யத்தில் த்ருஷிடியுள்ள [வன்
17 விளையாட்டில்
18 தலைக்கொத்த பிள்ளை
19 வேற்றுமுகம்
20 உற்றுப்பார்
21 சுக்குப்பொடிக்காரன்
22 மந்திரம் பலிக்கிறது
22 *a* † மந்திரம் சித்திக்கிறது
23 வெகுநாள் ஆயிற்று
24 தெரியவருகிறது
25 இளம்பிள்ளை
26 † இளமப்ராயம்
27 † இளம்படுக்கை, பயிர்
28 † இளங்கன்று
29 தேசாந்தரம் போகிறது
30 கட்டி முத்தமிடு
31 கட்டித்தழுவு
32 ஆயிரம்தரம் விசாரிக்கிறது
33 * பணம் என்றால் பிணமும் [வாய் திறக்கும்
34 தூக்கி வாரிப்போடுகிறது
35 அபூத கல்பனை
36 உபசாரம் விசாரிக்கிறது, கே [ட்கிறது, சொல்லுகிறது
37 யோகக்ஷேமம்
38 இல்லாக்குடி
39 கைகொண்ட
40 † கைநிறைய
41 * கைநிறைந்த பணம் கண் [நிறைந்த மாப்பிள்ளை
42 மனம் கவருகிறது
43 விளையாட்டுப் புத்தி
44 கைத்தொழில்
45 இரக்கப்போனாலும் சிறக்க [ப்போ
46 கந்தைத் துணி
47 இலேசான கார்யம்
48 நோட்டம் பார்க்கிறது.
49 ஆசை வார்த்தை சொல்லு [கிறது
50 * அழுதபிள்ளைக்கு வாழைப் [பழம் காட்டுகிறது
51 குளிர்ந்த பேச்சுப் பேசுகி [றது
52 கண்ணுக்குத் தென் படுகி [றது

பரிச்சேதம் 2.

53 தீவளர்க்கிறது-மூட்டுகிறது
54 † தீ மிதிக்கிறது
55 தூபம் கமழ்கிறது
56 மந்தரம் ஜபிக்கிறது
57 திகிலடைகிறது
58 தலைப்படுகிறது
59 † தலையிட்டுக்கொள்கிறது.
60 படிக்கட்டு

61 துருப்பிடிக்கிறது
62 லோகோத்தரமான
63 உத்தியானவனம்
64 தூண்டா விளக்கு
65 பத்ரமாகப் போகிறது.
66 கண்ணைக் கவருகிறது
67 தேஜோமயம்
68 நவரத்ன கஜிதமான
69 உள்ளம் பூரிக்கிறது
70 கைப்பற்றுகிறது
71 கை கொடுக்கிறது (ப. பொ)
72 பிடிவாதம்
73 † ஸம்வாதம்
74 † வாதி
75 † ப்ரதிவாதி
76 † கார்யவாதி
77 யதாஸ்தானம்
78 அந்தகார இருள்
79 ஓலமிடுதல்
80 கிணற்றிலிருந்து பேசுவது [போல் பேசுகிறது
81 காதில் விழுகிறது
82 திக்குத் திசை
82 *a* ஈச்வரத்தியானம்
83 கையைப்பிசைகிறது
84 கீழேதள்ளிவிடுகிறது

பரிச்சேதம் 3.

85 மனப்பூர்வமாக
86 கையில் ஒப்புவிக்கிறது
87 பறிகொடுத்தவள்போல
88 பட்டினி பசி
89 * மழைமுகம் காணுதபயிர்
90 ஒருவன் உயிர் ஒருவனுக்கு [வருகிறது
91 கண்டு கொள்
92 அனுயாஸமாக
93 கண்டெடுத்தாற்போல்
94 மாற்று உறை
95 திருட்டுச்சொத்துக்குத் [தொப்பளை மரக்கால்
96 பஞ்சத்திற்கு பிள்ளை விற் [பார் போல்
97 கட்டிக்கொடுத்த சோறும் [சொல்லிக்கொடுத்தசொல்லும்
98 அருமை பெருமை
99 அரிய பெரிய †
100 நடு நடுங்கி
101 வசமாகிறது
102 அதிர்ந்து அடித்தாருக்கு [ஐயனுருமில்லை பிடாரியுமில்லை
103 அதட்டி அடிக்கிறது
104 இட்ட கட்டளை
105 சிரமேற்கொண்டுசெய் [கிறது
106 எழுந்தருளியிரு
107 ஷட்ரஸோபேதம்
108 அறுசுவையுண்டி
109 வரலாறு
110 புலப்படுகிறது
111 கூழுத்பாதை
112 ஆசைக்கு அளவில்லை
113 வாய்க்கு வந்தது

பரிச்சேதம் 4.

114 ஒருநாள் தினம்
115 கடை சாத்துகிறது
116 கண்டு களிக்கிறது
117 அவாக்கொள்ளுதல்
118 கோஷா ஸ்திரீ
119 கண்ணைப் பிடுங்கு
120 * முடவன் கொம்புத்தேனுக் [கு ஆசைப்படுதல்
121 ஒதுக்கிடம்
122 ஆத்மத்ருப்தி
123 மேன் மேலும்
124 மணம் புரிகிறது

125 அகத்தினழகு முகத்தில்
[தெரியும்
126 அடுத்தது காட்டும் பளிங்
கு போல், கடுத்ததுகாட்டுமுகம்
127 முகம் வாடுகிறது
128 க்ரசமாக இளைக்கிறது
129 வ்யாதியை மருந்து கேட்கி
130 இராஜ்யகாரியம் [றது
131 காரியத்தில் அமர்கிறது
132 ஒருவர் மற்றொருவர் கண்
[ணில் விழுகிறது
133 பைரங்கமான இடம்
134 பேடி ஆகிறது
135 அவஸரத்தோடுஅவஸரமாக
136 'தர்பார்' கூடுகிறது
137 தினந்தோறும்
138 கொலுமண்டபம்
139 கண்குளிரப் பார்க்கிறது
140 கற்களின் 'நீரோட்டம்'
141 அந்தப்புரம் (ப. பொ)
142 பட்டமகிஷி
143 செவி சாற்று, சாய், மடு
[காது கொடு
144 உட்கருத்து
145 நடக்க நடக்கப்பார்ப்போம்
146 தீர விசாரிக்கிறது
147 * ஆய்ந்து செய்யாக்காரியம்
[தான் சாகமருந்து உண்பது
148 வாக்குப்போக்குதல்
149 உடன்படுகிறது
150 உட்பொருள்
151 ஆநந்த ஸாகரத்தில் மூழ்
[கிறது
152 ஒரு நாழிகை ஒருயுகமாக
[இருக்கிறது
153 மகிழ்ச்சி கூர்கிறது

பரிச்சேதம் 5.

154 வாக்குத்தத்தம்
155 நாள் வைக்கிறது (பார்க்
[கிறது
156 தற்செயல்
157 திடுக்கிடல்
158 வரவழைக்கிறது
159 மணாளன்-மணாட்டி
160 தனிக்காவலில் வைக்கிறது
161 காதல் கொளல்
162 பித்துப் பிடித்தவன்போல்
163 சித்தப்ரமை
164 ஸமாதானம் சொல்லுகிறது

பரிச்சேதம் 6.

165 திடமனம்
166 மெய் காவலாக
167 * கிட்டாத பொருளுக்கு
[கொட்டாவி விடுதல்
168 பெருமூச்செறிகிறது
169 நொடிப்பொழுது
170 விச்வாமித்ர ஸ்ருஷ்டி

பரிச்சேதம் 7.

171 ஊர்கோலம்
172 திரள் திரளாக
173 கேள்வியுறுதல்
174 ஓர் உடம்பு ஈருடம்பு ஆகி
[றது
175 மங்கள ஸ்நானம்
176 உடுப்ப உடுத்தி, பின் பூசுவ
[பூசி
177 மாப்பிள்ளைபோல் விளங்கு
[கிறது
178 மணக்கோலம்
179 தந்துதவுகிறது
180 இஷ்டமித்ரர்கள்
181 ஊர்வலம்
182 கலியாணக் கூடம்
183 மங்கல வாத்தியம்
184 வாத்தியம் கோஷிக்கிறது

185 சுப முகூர்த்தம்
186 ஆசி கூறுகிறது
187 பலமான விருந்து
188 வாண வேடிக்கை
189 விடைபெருகிறது
190 இச்சாமாத்திரம் ஸ்ருஷ்டி
191 சர்வபங்கம்
192 கண் உற்ற
193 பூர்த்தி செய்கிறது
194 கட்டளையிடுகிறது
195 வெட்கித் தலை குனிகிறது
196 தலை தொங்கலிடுகிறது (ப. [பொ.
197 இஷ்ட மகிஷி

பரிச்சேதம் 8.

198 உயர்பதவி, உயர்தரபதவி
199 சோற்றுக்குத் தாளம் போ [டுகிறது
200 அது எங்கே?
201 அது எங்கே--இது எங்கே?
202 ஒரு பெண்ணை கட்டுகிறது
203 மேம்பாடுள்ள
204 வேட்டையாடுகிறது
205 † விளையாடுகிறது
206 † சூது, சீட்டு ஆடுகிறது
207 † பம்பரம், பந்து ஆடுகிறது
208 † நர்த்தனம் ஆடுகிறது
209 உலை வாயைத்தான் மூட [லாம் ஊர் வாயை யார் மூடலாம்
210 சோற்றுக்கு அழுது தண் [ணீருக்குத் தவிக்கிறது
211 தரையில்கிடக்கிறவன் தரையில் கிடக்கிறான், பாயில் கிடக்கிறவன் பாயில் கிடக் [கிறான்
212 ஹம்ஸதூளிகா மஞ்சம்
213 காடிக் கஞ்சி
214 ஊரெங்கும் இதேபேச்சு
215 வெள்ளிடை மலைபோல்
216 நன்கு உணருகிறது
217 துப்பு அறிந்து
218 * பணக்காரனோடு பத்துப் பேர் பைத்தியக்காரனோடு [பத்துப்பேர்
219 * ஆதாயமில்லாத செட்டி [ஆற்றோடு போவானா?
220 ஸூக்ஷமம் இருக்கிறது
221 நுண்ணறிவு
222 யாதார்த்தம்
223 பரீக்ஷை செய்கிறது
224 எண்ணம் உண்டாகிறது
225 * விநாசகாலே விபரீத புத்தி
226 * ஆண்டி சுற்றினது கம்பளி [மூட்டைக்கு
227 கிடைக்காது கிடைத்தது
228 ஓட்டம் எடுக்கிறது
229 யதாப்ரகாரம்
230 அலக்காகத் தூக்குகிறது
231 இருந்தவிடம் தெரியாமல்
232 கண்ணுக்கு எட்டாத
233 க்ஷணிக நேரம்
233 அ கோபம் ஊட்டு
234 கோபம் மூட்டு
235 பின்கட்டுமுறையாக
236 சிறைப்படுத்து
237 * தீயும் காற்றும் கலந்தாற் [போல்
238 * புண்ணில் கோலிடுகிறது
239 புண்ணில் புளிப்பெய்கிறது
240 இடித்துக்காட்டுகிறது [னே
241 வந்தானோ இல்லையோ, உட
242 வந்ததும் வராததும்
243 அபராதம் செய்கிறது
244 † அபராதம் விதிக்கிறது
245 பதறாத காரியம் சிதறாது
246 வாய்தா தருகிறது

247 வாய்தா கேட்கிறது
248 ஆஜர் ஆகிறது
249 தண்டனை விதிக்கிறது
250 உறுதிமொழி கூறுகிறது
251 கட்டிவைத்து அடிக்கிறது
252 ஆனது ஆய்விட்டது
253 வெளிப்படுத்துகிறது
254 விட்டுவிடு
255 வேண்டிக்கொள்கிறது
226 பலிஷ்டை தேவதை
557 ஆகும் ஆகாது
258 கண்மூடிக் கண் திறப்பதற்
[குள்

பரிச்சேதம் 9.

259 எதிர்ப்படுகிறது
260 நற்காலம் (நல்லகாலம்)
261 † துஷ்காலம்
262 எட்டிப்பார்க்கிறது
263 சைகை காட்டுகிறது
264 கிட்ட நெருங்கு
265 திருவடிகளில் அபசாரப்படு
[கிறது
266 தெரியாத்தனம்
267 விட்டுப்பிரிகிறது
268 பலாத்காரம் செய்கிறது
269 உடன்படுகிறது
270 தேம்பி அழுகிறது
271 கண்மணி, கண்ணாட்டி, கண்
[ணாளன்
272 அனுகூலம் ப்ரதிகூலம்
273 தடுத்துச் சொல்லுகிறது
274 * பகையாளி குடியை உற
[வாடிக் கெடுக்கிறது
275 ஸம பந்தி
276 வாக்குத் தருகிறது
277 விஷம் தலைக்கு ஏறுகிறது
278 மனம் உவக்கிறது
279 அனுமதி கேட்கிறது (தருகி
றது)

280 உயிர் நீங்குகிறது
281 உயிர் துறக்கிறது
282 அளவிறந்த
283 ஆநந்தக்கடலில் மூழ்கிறது
(ஸாகரம்)
284 பெருக வாழ்கிறது
285 இல்லற தர்மத்தை நடத்து
கிறது
286 உற்று-உற் என்று-மேலோ
ட்டமாக-மேலெழுந்தவாரி
யாக-மேல்பார்வை-கீழ்ப்
பார்வை-கோணல்பார்வை.
287 விளக்குப்பார்வை-அண்ணாந்
து-குனிந்து-நிமிர்ந்து-ஒண்
ணைக்கண்-உள் நுழைந்
து-ஆழ்ந்து-ஆராய்ந்து-ஆகா
சம்-மார்பை-(பார்க்கிறது.)
288 உதவி புரி, பெறு
289 சிற்றப்பன்-பெரியப்பன
290 நாள்மலர் (பொ)
291 என்னசெய்கிறான் (ப.பொ.)
292 விளையாட்டு வினை
293 கடை வைக்கிறது
294 விட்டுப்போனது
295 பற்றவைக்கிறது (ப. பொ.)
296 சொன்னதைக் கேட்கிறது
(ப.பொ.)
297 விளக்கை அணைக்கிறது (அவி
க்கிறது) (ப. பொ.)
298 கனிகள் (ப. பொ.)
299 கையை பிசை, நெறி கட்டு
300 கையைக் காட்டுகிறது
(ப. பொ.)
301 தாய்முகம் காணாத பிள்ளை
302 பாட்டில் போடுகிறது
303 போது போகிறது
304 போது போக்குகிறது
305 அழுக்கு அடைகிறது
306 மறைவிடம் (ப. பொ.)

307 விஷயங்கள் (ப. பொ.)
308 உட்பொருள்—வெளிப்பொருள்
309 பெண்சாதி (ப. பொ.)
310 ஆட்கொள்ளு
311 ஆட்படுத்து
312 ஆட்படு
313 வந்தது வந்துவிட்டது
314 உடம்பாடு
315 உட்படிகிறது
316 உட்படுகிறது
317 மாற்றி, தடுத்து, ஒன்றுக்கு இரண்டு, அதட்டி, பணிந்து, நயந்து, கடுந்து, உரத்து, தாழ்ந்து—(சொல்லுகிறது)
318 பந்தி போஜனம்
319 இல்லறம்—துறவறம்
320 இல்லறம் நடத்து, நடாத்து